செ.வெ.எண்:34/மே நாள்:17.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மேல்நிலைப்பள்ளி அரசு பொதுத் தேர்வு- 2016 எழுதிய மாணவ, மாணவியர்களில் 95.04% மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மேல்நிலைப்பள்ளி அரசு பொதுத்தேர்வு 2016-ன் முடிவுகள் இன்று (17.05.2016) வெளியானதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளையும், அரசு பள்ளிகளில் (Elite) பயின்று மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளையும் பாராட்டி புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

மேல்நிலை பள்ளிகளுக்கான அரசு பொதுத்தேர்வு 04.03.2016 அன்று தொடங்கி 01.04.2016 வரை நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 14,420 மாணவ, மாணவியர்கள் இத்தேர்வினை எழுதினார்கள். பள்ளிக்கல்வி துறையின் மூலம் மேல்நிலைப்பள்ளி அரசு பொதுத்தேர்வுக்கான முடிவுகள் இன்று வெளியிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழை முதல் பாடமாகக் கொண்டு கல்வி பயின்ற இராமநாதபுரம், செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த மாணவி செல்வி.எம்.சுவாதி 1183 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் முதல் இடத்தினையும், கீழக்கரை ஹமீதியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த மாணவி செல்வி.எஸ்.தாசன் உசேன், 1182 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தினையும், பரமக்குடி, லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த மாணவன் செல்வன்.எம்.நிதிஷ் குமார், 1179 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் மூன்றாம் இடத்தினையும் பெற்றனர்.

அதே போல தமிழ் மொழியை முதல் பாடமாக கொண்டு அரசு பள்ளிகளில் (Elite) பயின்று செல்வன்.ஆர்.மனோஜ்குமார் 1175 மதிப்பெண்கள் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தினையும், செல்வி.எஸ்.நஸ்ரீன் 1161 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தினையும், செல்வி.டி.இலக்கியா எழிலரசி 1158 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தினையும் பிடித்துள்ளனர். மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்களை பரிசாக வழங்கி பாராட்டினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 32 அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளும், 30 மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளும் உள்ளன. அவற்றில் 14 அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 27 தனியார் பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் 100 சதவீத தேர்ச்சி பெற்றுள்ளனர். மேல்நிலைப்பள்ளி அரசு பொதுத் தேர்வு முடிவுகளின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்களின் ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் 95.04% ஆகும். இந்த தேர்ச்சி சதவீதமானது கடந்த ஆண்டை விட 0.38% கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.ஜேசுரத்தினம், இராமநாதபுரம் கல்வி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் திரு.உசேன்கான், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி உள்பட மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**